**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

# ஸ்ரீவைகானஸர்களின் சிறப்பு

ஹரித்வாரமங்கலம் ஸ்ரீவைகாநஸ மஹாசாந்திஸிம்மம்
எஸ்.டி.ராஜம்பட்டாச்சாரியார்

ஸ்ரீமன்நாராயணன் தம்மை பூலோகத்தில் அர்ச்சிப்பதற்காக தன்னுடைய ஆத்மாவிருந்து விகநஸரை ச்ருஷ்டி செய்து வேத வேதாந்த இதிஹாஸங்களையும் அர்ச்சிராதி மார்க்கத்தையும் உபதேசித்தருளினார். இவருடைய உபதேசத்தின்படி பூலோகத்தில் அர்ச்சையை ஸ்ரீமத்விகனஸர் மேற்கொண்டதால் இந்த சாஸ்த்ரம் பகவத் சாஸ்த்ரம் என்று இன்றும் அனைவராலும் வழங்கப்பட்டு வருகிறது. இவரின் வழித்தோன்றல்களே ஸ்ரீவைகானஸர்கள் ஆவர். ஸ்ரீவைகானஸர்களைப் பற்றி வேதங்களும், இதிஹாஸங்களும், புராணங்களும் சிறப்பாகவே எடுத்துரைக்கிறது. ரிக்வேத ப்ராம்மணத்தில் "ப்ரவ: பாந்தமந்தஸோ தியாயதே மஹே சூராய விஷ்ணவே சார்ச்சத'' என்று ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

முதன்முதல் யஜுர்வேதம் மட்டும் தான் இருந்தது. இந்த ஸமயத்தில் தான் ஸ்ரீமத்விகனஸர் பூலோகத்திற்கு எழுந்தருளி (வந்து) அர்ச்சா சாஸ்த்ரத்தை கடைபிடித்துள்ளதாக சான்றுகள் கிடைக்கின்றன. (ஏக ஆஸீத் யஜுர்வேதஸ்தம் சதுர்த்தாஹ்யகல்பயத்). ஸாமவேதத்தில் ஸ்ரீவைகானஸர்கள் இந்திரனுக்கு ப்ரியமானவர்கள் என்றும், வராஹபுராணத்தில் அரசமரம், காராம்பசு, துளசி, ஸ்ரீவிகனஸர் இவர்களில் ஸ்ரீமத்விகநஸரே எனக்குப் ப்ரியமானவர் என்றும், வ்ருத்தயாக்ஞவல்க்யத்தில் வைதிகமார்க்கத்தில் ப்ரும்மத்தையறிந்த ஸ்ரீவைகானஸர்களை பார்ப்பதாலேயே பாபம் அழிகின்றது, வைணவ பெருமாளையும், ஸ்ரீவைகானஸ ப்ராம்மணர்களையும், கங்கையையும் ஸ்ரீவிஷ்ணுபதிகாலத்தில் ஸேவிப்பதால் அனைத்து பாபங்களும் போக்கடிக்கப் படுகிறது என்றும், மஹாபாரதம் சாந்திபர்வாவில் ஆயிரம் விஷ்ணுபக்தர்களுக்கு சமமானவர்கள் ஸ்ரீவைகானஸர்கள் என்றும், பிரம்மகைவர்த்தத்தில் வேதவிற்பண்ணர்களுக்குள் ஸ்ரீவைகானஸர்களே சிறந்தவர்கள் என்றும், கூர்மபுராணத்தில் ஸ்ரீவைகானஸர்கள் தன்னையே எம்பெருமானிடத்தில் அர்பணித்துக்கொண்டுள்ளதால் அவர்கள் சிறந்தவர்கள் என்றும், புராணாந்தரங்களில் எங்கு ஸ்ரீவைகானஸ ப்ராம்மணர்களும் பசுக்கூட்டங்களும் பில்வம், பலாச ஸமித் இருக்கின்றனவோ அங்கு பகவான் ஸ்ரீமன்நாராயணன் பூர்ணமாய் எழுந்தருளியிருப்பதாகவும், ஹாரீதஸ்ம்ருதியில் சுத்த ஹ்ருதயத்தை யுடைய ச்ரேஷ்டமான ஸ்ரீவைகானஸர்கள் புண்ணியத்தால் ஸ்ரீவிஷ்ணுலோகத்தை அடைவார்கள் என்றும், பாஞ்சராத்ரம் பௌஷ்கரஸம்ஹிதையில் ஸ்ரீவைகாநஸர்கள் ஸ்ரீவிஷ்ணுவின் ஆராதன விசேஷத்தால் சுத்த ஸத்வர்களாகி மறுபிறவி இல்லாதவர்கள், பலனை எதிர்பாராமல் அர்ச்சிப்பவர்கள் என்றும், கௌதமீயத்தில் ஸ்ரீவைகானஸர்கள் விதிப்படி ஆத்மார்த்தமான பூஜையால் சூக்ஷமத்தின் சூக்ஷமமாக பிம்பத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீவிஷ்ணுவை தெரிந்து கொண்டுள்ளவர்கள் என்றும், மஹாபாரதம் ஆரண்யபர்வாவில் ஸித்தர்களாகிய ஸ்ரீவைகானஸர்களுடைய ஆச்ரமம்

எனக்கு மிகவும் ப்ரியமானது என்றும், இன்னும் பற்பல இடங்களில் ஸ்ரீவைகானஸர்கள் வாலகில்யர்கள், மஹான்கள் என்றும், கருடபுராணத்தில் ஹோத்ருகணங்களாகிய கௌஷீதகர்கள் தவத்தின் வமையால் தங்களுக்காக மூன்று க்ராமங்களை உற்பத்தி பண்ணினார்கள் ஆனால் ஸ்ரீவைகானஸர்கள் அர்ச்சையின் மஹிமையால் தங்களுக்காக மூன்று க்ராமங்களை உற்பத்தி பண்ணினார்கள் என்றும். பாஞ்சராத்ரம் பாரமேச்வரஸம்ஹிதையில் பவித்ராரோபண ஸமயத்தில் ஐந்து ஸ்ரீவைகானஸர்களுக்கு குறைவின்றி மரியாதை செய்து அர்ச்சித்த பிறகே பெருமாளுக்கு பவித்ர ஆரோபணம் செய்ய வேண்டும் என்றும், நாரதீயபுராணத்தில் பிரம்மத்தை அறிந்த ஸ்ரீவைகானஸர்களுக்கு தானத்தை அளிப்பது சிறந்தது என்றும், வாஸிஷ்ட ராமாயணத்தில் தர்மாத்மாவான ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் செய்து கொண்டு மக்களுடன் ஸ்ரீவைகானஸர்களை பூஜித்தார் என்றும் இவ்வாறு பற்பல சாஸ்த்ர, ஆர்ஷ க்ரந்தங்கள் ஸ்ரீவைகானஸத்தைப் பற்றி சிறப்பித்துள்ளது.

ஸ்ரீவைகானஸர்கள் பஞ்சகாலபராயணர்கள்

பஞ்சகாலம் என்பது ஐந்து காலங்களை குறிப்பதாகும். அதாவது ஒவ்வொரு நாட்களையும் ஐந்து பகுதியாக பிரித்து அந்த ஐந்து காலங்களிலும் கட்டுப்பாடாக ஸ்ரீமன்நாராயணனுடைய ஸம்பந்தத்துடன் இருப்பதால் அவர்களை பஞ்சகாலபராயணர்கள் என்று வழங்குவதாக சாஸ்த்ரம் பரிந்துரைக்கிறது. இந்த பஞ்சகாலபராயணத்வம் ஸ்ரீவைகானஸர்களுக்கு மட்டுமே பொருந்தும் என ஸ்ரீனிவாஸமாகி தனது தசவிதஹேது நிரூபணம் என்ற க்ரந்தத்தில் விஸ்தரித்துள்ளார். ஏனெனில் ஸ்ரீவைகானஸ க்ரந்தம் ப்ருகு ப்ரோக்தம் வாஸாதிகாரத்தில் ஐந்து காலங்களைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

> ப்ராத: காலே அபிகமனம் உபாதானம் தத: பரம்/
> மத்யாஹ்ன்ன இஜ்யாம் குர்வீத ஸ்வாத்யாயச்சாபராஹ்ன்னகே/
> யோகம் ஸாயாஹ்ன்ன காலேது பஞ்சகால உதாஹ்ருத://

ப்ராத: காலம், உபாதான காலம் (காலை நேரத்திற்கும் மதியத்திற்கும் இடைப்பட்ட நேரம்), மத்யாஹ்ன்னம், அபராஹ்ன்னம் (மதியத்திற்கு பிறகு மாலை வரை), ஸாயாஹ்ன்னம் என ஒவ்வொரு நாளையும் ஐந்து பெரும் பிரிவுகளாக பிரித்துள்ளனர். இந்த ஐந்து காலங்களிலும் இடைவிடாது ஸ்ரீமன்நாராயணனை த்யானித்து வழிபடுவது ச்ரேஷ்டம். இவ்வாறு வழிபடுபவர்களை பஞ்சகால பராயணர்கள் என்று வழங்கப்படுகிறது என கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமத்பாகவதத்திலும் பகவான் கூறியுள்ளதாவது – (ஆத்யம் கர்மாபிகமனம் உபாதானம் தத: பரம்/ இஜ்யா தபச்ச ஸ்வாத்யாய: ததா யோக: பரிகீர்த்தித://)

1. விடியற்காலையில் எழுந்து (ப்ராம்ம முஹூர்த்தத்தில்) நாராயணனை மனதில் த்யானித்து தன்னுடைய சூத்ரப்படி நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்வதாகும். அதாவது அவரவர்களின் கல்பசூத்ரத்தின்படி ஸ்னான,

ஸந்த்யாவந்தன, ப்ரம்மயக்ஞாதிகளைச் செய்வதாகும். ஸ்ரீவைகாநஸர்களைப் பொருத்த வரையில் அவர்களுடைய கல்பசூத்ரத்திலேயே மேற்கூறியவைகள் அனைத்தும் கூறுப்பட்டு க்ருஹ திருவாராதனமும் கடைபிடிக்கும் படி கூறப்பட்டுள்ளது. மற்ற கல்பசூத்ரகாரர்களுக்கு இவ்வாறு முழுவதையும் கூறவில்லை. ஆதலால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய பகுதியை ஆபஸ்தம்பர்கள் போதாயனத்திருந்தும், போதாயனர்கள் ஆபஸ்தம்பத்திருந்தும் எடுத்துக் கொள்கின்றனர். இதையே அவர்கள் அனுக்தம் அன்யதோ க்ராஹ்யம் என்று வழங்குகின்றனர். ஆதலால் முதல் காலமான அபிகமன காலத்தில் முழுவதுமாக ஸ்ரீமன்நாராயண ஸம்பந்தத்தை பெற்றவர்கள் ஸ்ரீவைகானஸர்களே ஆவர்.

2. தன்னுடைய கர்மானுஷ்டானங்களை செய்து முடித்த பின்பு தன்னை சந்தனம் போன்ற வாஸனை திரவ்யங்களால் (அர்ச்சாகாலேது சந்தனம்) நன்கு அலங்கரித்துக் கொண்டு உபாதான காலத்தில் எம்பெருமானை அர்ச்சிக்கவேண்டும். இந்த காலத்தில் பூஜா ஸாதனங்களையும் யக்ஞத்திற்கு வேண்டிய (ஸம்பாராஹரணத்தையும்) பொருட்களை ஸேகரிக்கும்படிக் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு பொருட்களை சேகரித்து ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சிக்க வேண்டும் என்று கூறுகிறார். (நீத்வா உபாதான ஸமயம் இத்தம் ததனு பூஜயேத்). இந்த இரண்டாவது கட்டுப்பாடும் ஸ்ரீவைகானஸர்கள் போன்ற சிலருக்கே பொருந்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

3. மதியத்தில் ஸ்னானம் செய்ய வேண்டுமென்பது சிலர் கருத்து. இந்த நேரத்தில் தன்னுடைய கல்பத்தின்படி தேவர்களுக்கு அதிபதியான ஸ்ரீமன்நாராயணனை அமூர்த்த வடிவமான அக்னியில் ஹோமம்/யக்ஞம் செய்து மகிழ்ச்சி யடைவிக்க வேண்டும், நித்யம் ஸாயம் ப்ராதர் ஹோமாந்தே அர்ச்சயதி என்ற ஸ்ரீவிகனஸரின் கூற்றுக்கிணங்க ஹோமம் முடிந்தவுடன் ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சிக்க வேண்டும். இதையே மத்யாஹ்ன்ன இஜ்யாம் குர்வீத என்று குறிப்பிட்டுள்ளனர்.

4. காலையில் எழுந்தது முதல் ஜபம், ஹோமம், அர்ச்சனம் போன்ற அனைத்தையும் முறைப்படி செய்த பின் நதியின் கரை, ஸ்ரீவிஷ்ணுவின் கோவில், தேவர்கள் வஸிக்கும் இடம், பலவிதமான அமைதியான சிறப்பு வாய்ந்த காடுகள், மலைகள் அல்லது வீடு இதில் ஏதாவது ஒரு இடத்தில் அவரவர்களின் சாகைப்படி வேதத்தைப் பயிலவேண்டும்.

ருசோ யஜூம்ஷி ஸாமானி வித்யமானான்யனேகதா/
சாகாபேதையர் மூலசாகாம் ஏகாயன ஸமாஹ்வயாம்/
த்ரயீமயீமதீயீத ஸுகாஸீன: ஸமாஹித:/

இவ்வாறு அவரவர்களின் சாகையை பயின்று நன்மையடைய வேண்டும்.

5. மாலை ஸந்த்யா காலத்தில் மீதமுள்ள ஜபஹோமங்களைச் செய்து முடித்து யோகத்தை பண்ணவேண்டும். இதை பகவத்கீதையில் ''யோகாஸனே ஸமாஸீனோ யுஞ்ஜீதாத்மானமாத்மனா'' என்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் கூறியுள்ளார். இந்த யோகத்தைப்பற்றி சில இடங்களில் இரவு சாப்பிட்டு உறங்கியபின் நடுவில் எழுந்து ஆசமனம் செய்து யோகத்தால் பரமபுருஷனை மனதில் தியானித்து யோகத்தை கடைபிடிக்கச் சொல்லுகிறார்.

   புக்தான்னம் விச்ய சயனே ஸமுத்தாய மஹாநிசி/
   ஆசம்ய ப்ரயதோ பூத்வா த்யாத்வா பரமபூருஷம்//

இவ்வாறு ஐந்து காலங்களிலும் ஸ்ரீவைகானஸர்கள் ஸ்ரீமன்நாராயணனுடைய ஸம்பந்தத்துடன் இருப்பதால் பஞ்சகாலபராயணர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இந்த விசேஷமான லக்ஷணத்வம் ஒவ்வொருவருக்கும் பதிமூன்றாவது வயதில் (ஒருவருடம்) மட்டும் ஸித்திப்பதாகும். ஸ்ரீவைகானஸர்களைத் தவிர மற்றவர்கள் அபிகமன காலத்தில் தனது கல்பசூத்ரத்தை விட்டு மாறி மற்ற கல்பசூத்ரங்களிருந்தும் வேண்டியவற்றை கடைபிடிப்பதாலும், பாஞ்சராத்ர ஆகம ஸித்தாந்தத்தில் ''காலம் மத்யம் தினச்சித்ரம் பஞ்சகாலபராயண:'' என்று காலை, மதியம் ஆகிய இரண்டு வேளை மட்டும் குறிப்பிடுவதாலும், தந்த்ர ஸித்தாந்தத்தில் அனுஷ்டானத்தை முழுமையாக கடைபிடிப்பதால் (ஸாந்தராலமனுஷ்டானம்) பஞ்சகாலபராயணத்வம் ஸித்திக்கும் என்று கூறியுள்ளதாலும், இங்கு ஐந்து காலங்கள் சரிவர குறிப்பிடாததாலும், க்ரமத்தின்படி சிந்தனை செய்தாலும் ஆபஸ்தம்பாதிகளுக்கு ஸ்ரீமன்நாராயணனுடைய ஸம்பந்தம் நான்கு காலங்களில் மட்டுமே ஸித்திப்பதால் இவ்விஷயம் ஸ்ரீவைகானஸர்களைத் தவிர மற்றவர்களுக்கு ஸித்திக்காது என்பதை நமது பாஷ்யகாரார் சிறப்பாக விளக்கியுள்ளார். இது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

* * * * *